DISTRICT MUNSIF COURT, UTHAMAPALAYAM
Present : Thiru. C.Rajasekar, B.A, B.L.,
District Munsif, Uthamapalayam.

**OS.No. 171/2023**

**CNR.No: TNTH06-000218 -2023 )**

| | | | |
|---|---|---|---|
| Name | : **சாய்ராம்** | Town | **சின்னமனூர்** |
| Father's Name | : **வெங்கட்ராமன்** | Taluk | : **உத்தமபாளையம்** |
| Age | : | **PW1** | |

---

நாள் : 24.06.2025

**1 ,2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1) 1ம் பிரதிவாதி முத்து என்ற முத்துகிருஷ்ணன் இதே நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 3/2020 என்ற வழக்கினை தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது என்றாலும், அந்த வழக்கில் நானும், எனது சகோதரி ரமாவும் பிரதிவாதிகளாக இருந்து வழக்கு நடத்து வருகிறோம் என்றால் சரிதான். அசல் வழக்கு எண்,. 3/2020 வழக்கில் நான் தான் எங்கள் தரப்பில் சாட்சியாக முன்னிலையானேன் என்றால் சரிதான். அ.வ. எண். 3/2020 வழக்கின் சொத்தும், இந்த நிர் வழக்கின் சொத்தும் ஒன்று தான் என்றால் இல்லை, அ.வ.எண்.3/2020 வழக்கில் முழு சொத்தும், வழக்கு சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ளது, இந்த வழக்கில் முத்துகிருஷ்ணன், மணிமாறனுக்கு கிரையம் செய்து கொடுத்த பகுதி சொத்தினைத்தான் வழக்கு சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ளது.

2) அ.வ.எண்.3/2020 வழக்கில் கட்டுப்பட்ட முழு சொத்தும், எனது தந்தையின் சகோதரர் கிருஷ்ணமூர்த்தி மற்றும் இராமச்சந்திரனுக்கு பாகப்பிரிவினை மூலமாக கிடைக்கப்பெற்ற பாக சொத்து என்றால் சரிதான், அவர்கள் இருவருக்கும் சேர்த்து பிரிவினையின்றி ஒதுக்கப்பட்டது. இராமசந்திரன் என்பவருக்கு புத்திசுவாதீனம் கிடையாது என்றால் ஆமாம், முன் எப்படி இருந்தார் என்று எனக்கு தெரியவில்லை, எனக்கு நினைவு தெரிந்து இராமசந்திரனுக்கு புத்திசுவாதீனம் இல்லை.

இராமச்சந்திரனுக்கு திருமணம் ஆகவில்லை என்றால் இல்லை, திருமணமாகி விவாகரத்து ஆகிவிட்டது. இராமச்சந்திரனுக்கு நேரடி வாரிசுகள் யாரும் இல்லாமல் அவர் இறந்துவிட்டார் என்றால் சரிதான், அவருக்கு மனைவியும், குழந்தையும் இல்லை.

3) இராமச்சந்திரனுக்கு மனைவியும், குழந்தையும் இல்லாமல் இராமச்சந்திரன் இறந்து விட்டதால் அவருக்கு சட்டப்படி அவரின் உடன்பிறந்தவர்கள் தான் வாரிசுகள் என்றால் சரிதான். எனது தந்தை பெயர் வெங்கட்ராமன் என்றாலும், நான் கிருஷ்ணமூர்த்திக்கோ, இராமச்சந்திரனுக்கோ பிள்ளை இல்லை என்றாலும் சரிதான். இராமச்சந்திரன் இறந்த பிறகு 02.03.2011 ம் தேதியில் கிருஷ்ணமூர்த்தி தனது பாகத்தையும், இராமச்சந்திரனின் பாகத்தையும் சேர்த்து எனது தந்தை பெயருக்கு பாகவிஸ்தி ஆவணம் ஏற்படுத்திக்கொடுத்தார் என்றால் சரிதான். எனது தந்தை தற்போதும் உயிருடன் தான் இருக்கிறார் என்றால் சரிதான். 02.03.2011 ம் தேதிய பாகவிஸ்தி ஆவணத்தை ஆட்சேபித்து நானோ, எனது சகோதர்களோ வழக்கு ஏதாவது தாக்கல் செய்தோமா என்றால் 2019 ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் தான்இந்த விபரம் தெரியவந்தது, அதன்பிறகு எனது தம்பி அ.வ.எண்.3/2020 வழக்கினை தாக்கல் செய்திருக்கிறார்.

4) 02.03.2011 ம் தேதிய பாகவிஸ்தி ஆவணத்திற்கு பிறகு எனது தகப்பனாரின் உடன்பிறந்தவர்களோ, கிருஷ்ணமூர்த்தியின் வாரிசுகளோ மேற்படி பாகவிஸ்தி ஆவணத்தை ஆட்சேபித்து வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 02.03.2011 ம் தேதிய பாகவிஸ்தி ஆவணத்தின் அடிப்படையில் எனது தந்தை வழக்கு சொத்தின் முழுமையான உரிமையாளர் ஆகிவிட்டார் என்றால் சரியல்ல, அந்த ஆவணமே தவறான ஆவணம் ஆகும். வழக்கு சொத்து முழுவதுமாக எனது தந்தைக்கு பாத்தியப்பட்டது என்பதால், அச்சொத்தினைப்பொறுத்து அவரை நன்கு கவனித்துவரும் மகனான 1 ம் பிரதிவாதி பெயரில் 09.05.2019 அன்று தான செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்திக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல, என் தந்தை பெயரிலான பத்திரமும், அவர் எழுதிய தான செட்டில் மெண்ட் பத்திரமும்

உரிமையின்றி எழுதிக்கொடுக்கப்பட்ட ஆவணங்களாகும்.

5) 1ம் வாதி ரமா மாண்புமிகு தேனி முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் அ.வ.எண்.33/2018 –ஆக பாகப்பிரிவினை வழக்கு ஒன்றினை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை வழக்கில் நானும் ஒரு பிரதிவாதி என்றால் சரிதான், ரமா அந்த வழக்கை தாக்கல் செய்திருந்தாலும், நான் அந்த வழக்கில் அவருக்கு ஆதரவாகவே செயல்பட உள்ளேன். அ.வ.எண்.33/2018 வழக்கில் அ.வ.எண்.3/2020 வழக்கின் வழக்கு சொத்தினை காண்பிக்கவில்லை என்றால் சரிதான், அ.வ.எண்.3/2020 வழக்கு சொத்து பிரிவினையில்லாத கூட்டுக்குடும்ப சொத்து என்பதால் அச்சொத்தினை அ.வ.எண். 33/2018 வழக்கில் காண்பிக்கவில்லை.

6) அ.வ.எண். 3/2020 வழக்கு சொத்தானது என் தந்தைக்கு தனித்துப்பாத்தியப்பட்ட சொத்து என்பதால் தான் அதனை அ.வ.எண்.33/2018 வழக்கில் காண்பிக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் 15.06.2023ம் தேதியிட்ட கிரைய ஆவணம் செல்லாது என விளம்புகை செய்ய கேட்டு பரிகாரம் வேண்டியுள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கையும் அ.வ.எண்.3/2020 வழக்கையும் நான் எந்த அடிப்படையில் வாதம் மற்றும் எதிர்வாதம் செய்து நடத்தி வருகிறேன் என்றால் இராமசந்திரனின் வாரிசுகளின் வாரிசு என்ற அடிப்படையில் எனது உரிமையைப்பொறுத்து வழக்காடி வருகிறேன். இராமசந்திரனின் வாரிசுகள் உயிருடன் இருக்கும்போது எனக்கு இராமச்சந்திரனின் சொத்துக்களில் உரிமை எதுவும் இல்லை என்றால் வாரிசுரிமை குறித்த சட்டநிலை பற்றி எனக்கு தெரியவில்லை.

7) 1ம் பிரதிவாதி பெயரில் தான செட்டில் ஆவணம் ஏற்பட்டு, அவர் வழக்கு சொத்தில் முழுமையான உரிமையாளர் ஆகிவிட்டபடியால், அச்சொத்தினைப்பொறுத்து உரிமை மாற்றம் செய்வதற்கு 1ம் பிரதிவாதி முழு உரிமை படைத்தவர் என்று சொன்னால் சரியல்ல. அதன்படி 1ம் பிரதிவாதி ஏற்படுத்திய கிரைய ஆவணத்தைபொறுத்து கேள்வி எழுப்ப எனக்கு எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. என் பெற்றோருக்கு என்னையும் சேர்ந்து எத்தனை பிள்ளைகள்

என்றால் என்னையும் சேர்த்து மொத்தம் 5 ஆண் பிள்ளைகள், 1 பெண் பிள்ளையும் ஆவோம். எனது சகோதரர்களில் சுப்ரமணி, லட்சுமணன் ஆகிய இருவரும் இறந்து விட்டனர் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி, 3ம் பிரதிவாதி பெயரில் ஏற்படுத்திய கிரையத்தை ஆட்சேபித்து எனது மூத்த அண்ணனான ராஜன் என்றால் சந்திரமௌலிஸ்வரன் என்பவர் ஆட்சேபனை எதுவும் செய்யவில்லை என்றாலும், வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரிதான், 1ம் பிரதிவாதிக்கு உதவுவதே எனது மூத்த அண்ணன் தான்.

8) எனது மூத்த அண்ணன் 1ம்பிரதிவாதிக்கு பின்புலமாக இருந்து உதவுவதாக எனது வழக்குரையிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எனது மூத்த அண்ணனான ராஜன் என்றால் சந்திரமௌலிஸ்வரனை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். இறந்துவிட்ட எனது சகோதரர்களான சுப்ரமணி, லட்சுமணன் ஆகிய இருவருக்கும் திருமணம் ஆகவில்லை என்றால் சுப்ரமணிக்கு திருமணம் ஆகவில்லை, லட்சுமணன் திருமணம் ஆகி விவாகரத்து பெற்று குழந்தைகள் இன்றி இறந்துவிட்டார். எனது சகோதரர் லட்சுமணன் சமீபத்தில் இந்த வழக்கு நிலுவையில் இருந்தபோது இறந்தார் என்றால் அ.வ.எண்.3/2020 தாக்கல் செய்த பிறகும், இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பும் இறந்தார்.

9) லட்சுமணன் இறந்தபோது இறப்பிற்கு நானும், ரமாவும் செல்லவில்லை என்றால் ரமா சென்றார், எனக்கு உடல்நிலை சரியில்லாததால் நான் செல்லவில்லை. லட்சுமணன் இறந்தபோது 1ம் பிரதிவாதி தான் இறுதி சடங்கை முழுமையாக செலவு செய்து நடத்தி முடித்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது அண்ணன் ராஜன் என்றால் சந்திரமௌலிஸ்வரன் 1ம் பிரதிவாதிக்கு பின்புலமாக இருந்து வருவதாக நான் கூறுவது வழக்கிற்காக கூறும் பொய்யான சாட்சியம் என்றால் சரியல்ல. இந்த வழக்கானது காலவரையறை சட்டத்தின்படி பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் எனக்கு எந்த உரிமையும் சட்டப்படி இல்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் நான் செல்லாதது என விளம்ப கேட்டுள்ள

15.06.2023 ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தில் மூல ஆணங்களைப்பொறுத்து பரிகாரம் எதுவும் வேண்டாததால் எனது வழக்கு நிலைக்கத்தக்கதில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்து உள்ளடங்கிய முழு சொத்தையும் பொறுத்து நானும், ரமாவும் இடையூறு செய்ததால் தான் 1ம் பிரதிவாதி எங்களுக்கு எதிராக அசல் வழக்கு எண். 3/2020 வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எனது தந்தை வெங்கட்ராமனை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அதனால் எனது வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை முடிவுற்றது)**

(ஓ.ம்) C. ராஜசேகர், B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
உத்தமபாளையம்.